மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் நான் இதைச் சொல்ல வில்லையென்றால் திரும்பவும் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற கருத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

அனுமதி அளித்த தீர்மானத்தின்மீது பேரவை தனது முடிவை தெரிவித்த பிறகு மற்ற தீர்மானங்கள் குறித்து முடிவு செய்யப் படும்.

ஈ. ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டமுன்வடிவு 1981

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

அரசினர் சட்டமுன்வடிவுகள்

அ. ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன் வடிவை'ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. நிலவரி வசூல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவை''ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.